பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ [illegible]: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' – A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: ஆடி 28 (12—8—72) சனி

வெளியூர்: ஆடி 29 (13—8—72) ஞாயிறு [இதழ்: 51

தேர்தல் செலவுக்கு

கம்யூனிஸ்டு பெற்ற பணம்

சட்டப் பேரவையில் முதலமைச்சர் தகவல்

சென்னை, ஆக. 12—

இன்று சட்டப் பேரவையில் வலது கம்யூனிஸ்டு உறுப்பினர் கே. சுப்பு எழுந்து 'நான் தேர்தலின்போது யாரிடமோ பணம் வாங்கியதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; நான் அப்படி யாரிடமும் பணம் வாங்கவில்லை; அவர் குறிப்பிட்டது போன்ற பெயருடைய எவரிடமும் நான் பணம் வாங்கவில்லை, அந்தப் பெருடையபவர் யாரும் என் தொகுதியில்--எங்கள் கட்சியில் இல்லை என்று கூறினார்.

உடனே முதலமைச்சர் எழுந்து 'நான் நேற்று சொன்ன அதே தகவலை இன்னமும் சொல்கிறேன்; இராசபாளையம் தொகுதித் தேர்தல் செலவுக்காக ரூ 5000 பெற்றுக்கொண்டு இரசீதும் கொடுத்திருக்கிறார்; அறந்தை எஸ். நாராயணன் என்பவர்தான் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டார்' என்றார்.

கே. சுப்பு:—"நான் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை."

முதல்வர்:—"அந்தப் பணம் உங்களிடம் வந்து சேரவில்லை என்ற தகவலை இப்போது உங்கள் மூலம் அறிகிறேன்."

இத்தொடர்பில் நேற்று நடைபெற்ற வாக்குவாதம் வருமாறு:

கே. சுப்பு:—"இராசபாளையத்தில் யாருடைய வீடோ இடிக்கப்பட்டது பற்றி முதலமைச்சர் குறிப்பிட்டார்; அவர்கள் அங்கே மேடைகளில் பேசியதும்--பாடியதும் எந்த அளவுக்கு இருந்தது என்பதை உணர வேண்டும்."

முதல்வர்:—"ஆக, அவர்கள் இப்படிக் கலை நிகழ்ச்சியில் பாடிய காரணத்தால் அவர்களது வீடுகள் இடிக்கப்பட்டன--என்று சொன்னதற்காக நன்றி."

கே. சுப்பு:—"நன்றி பற்றிச் சொல்கிறார்கள்; அந்தக் கட்சியில் எந்த அளவுக்கு நன்றியுள்ளவர்கள் இருக்கிறார்கள் என்பது தெரியும்."

முதல்வர்:—"எவ்வளவு நன்றியுடையவர்கள் எந்தெந்தக் கட்சிகளில் இருக்கிறார்கள் என்று எங்களுக்கும் தெரியும்; தேர்தலிலேயே என்னென்ன வாங்கியிருக்கிறீர்கள் என்றும் தெரியும்."

கே. சுப்பு:—"வாங்கியவர்கள் இருந்தால், அவர்களிடம் திருப்பி வாங்கிக்கொள்ளலாம்."

முதல்வர்:—"நீங்களே வாங்கியிருக்கிறீர்கள்."

கே. சுப்பு:—"இது தவறான குற்றச்சாட்டு; தெளிவாகச் சொல்ல வேண்டும்."

முதல்வர்:—"கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் தேர்தலில் நாங்கள் ஆதரவு மட்டும் தரவில்லை; சில இடங்களில் பணமும் தந்திருக்கிறோம்."

கே. சுப்பு:—"கட்சியில் வாங்கியிருக்கலாம்; எனக்காக வாங்கப்படவில்லை."

முதல்வர்:—"உங்கள் தொகுதிக்காகவே வாங்கப்பட்டிருக்கிறது."

கே. சுப்பு:—"ஆதாரத்தோடு கூற முடியுமா?"

முதல்வர்:—"இல்லாமல் வரமாட்டேன். (முதல்வர் இரசீதுகளைப் படித்துக் காட்டுகிறார்) 'இராசபாளையம் தொகுதிக்காக ரூ 5,000 பெற்றுக்கொண்டேன்' என்று நாராயணன் கையெழுத்துப் போட்டு எழுதிக் கொடுத்திருக்கிறார்; அது உங்களுக்காக வாங்கப்பட்டிருக்கிறது."

கே.டி.கே. தங்கமணி:—"7 கட்சிகள் கூட்டணி அமைத்தன; சிலர் வாங்கியிருக்கலாம்; யாராவது வாங்காமலே இருந்தார்களா? எல்லோருக்கும் தர நீங்கள் அன்னதாதாக்களா? நீங்கள் எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ள வேண்டுமா?"

முதல்வர்:—"எதைச் சொன்னாலும் ஏற்க வேண்டும் என்பதல்ல-- ஆதாரத்தோடுதான் கூறியிருக்கிறேன்."

ஏ. சுப்பிரமணியம்:—"வட்டச் செயலாளர், கிளைக் கழகச் செயலாளர்கள் எல்லாம் என்னிடம் பணம் வாங்கியிருக்கிறார்கள்; இதற்கான இரசீதை நான் காட்டுகிறேன்."

முதல்வர்:—"நண்பர் சுப்பிரமணியம் அவர்கள், தங்கள் தொகுதியில் வேலை செய்தவர்களுக்குச் சிற்றுண்டி--காபி செலவுகளுக்காகத் தருவது வேறு; இப்போது, 'சுப்பிரமணியம் வாங்கினார்' என்றும் கூறவில்லை - அப்படி வாங்கும் நிலையிலும் அவர் இல்லை; 'வாங்கியவரின் கையெழுத்து இருக்கிறது' என்றுதான் சொன்னேன்."

கே. டி. கே. தங்கமணி:—"நாங்கள் கொள்கை அடிப்படையில்தான் இருக்கிறோமே தவிர, குடும்பப் பிரச்சினைகளில் கட்சி நடத்தவில்லை; இப்படியெல்லாம் பணம் வாங்கியது பற்றி முதல்வர் சொலவது அழகல்ல."

முதல்வர்:—"எனக்கு என்னென்ன அழகு இருக்க வேண்டும் என்பது பற்றிப் பொதுமக்கள் நிர்ணயித்திருக்கிறார்கள்; நான் என்னென்ன செய்யவேண்டும் என்று கட்சி கட்டளையிடுகிறதோ அந்தக் கட்டளையைத் தலைவணங்கி ஏற்று நடந்துகொள்கிறேன்; என்னுடைய அழகை நிர்ணயிக்க வேண்டியவர் தங்கமணி அல்ல; 'குற்றச்சாட்டுக்கு என்ன ஆதாரம்--பொறுப்பு ஏற்க முடியுமா?' என்று சுப்பு கேட்டார்--ஆதாரத்தைக் காட்டினேன்."

பூம்புகாருக்குச் சுற்றுலாப் பேருந்து

சென்னை, ஆக. 11—

"விடுமுறை நாட்களில் சென்னையிலிருந்து பூம்புகாருக்குப் பேருந்து விடும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை; பூம்புகாரில் கலைக்கூடம் உருவாக்கப்பட்ட பின்னர் இது பற்றி யோசிக்கப்படும்" என்று சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள், என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அவையின் கண்ணியம் நிலைநாட்டப்பட்டது

★

முதல்வர் கலைஞர் அக்கறை--பேரவைத் தலைவர் பாராட்டு

சென்னை, ஆக. 12—

இன்று சட்டப் பேரவையில் கேள்வி நேரம் முடிந்ததும் முதல்வர் அவர்கள் எழுந்து பின்வருமாறு கூறினார்:—

"நேற்று மாலை நானும், கல்வியமைச்சரும், பிறபட்டோர் நல அமைச்சரும் டில்லிக்குச் செல்லும் தியாகியை வழியனுப்புவதற்காகப் புகை வண்டி நிலையத்திற்குச் சென்றிருந்தோம்; அப்போது இங்கு சட்டப் பேரவையில் விரும்பத்தகாத நிகழ்ச்சி ஒன்று நடந்திருக்கிறது.

எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஆர். ஆர். முனுசாமி, சொல்லத்தகாத வார்த்தையைப் பயன்படுத்தினார் என்பதைக் கேள்வியுற்று மிகவும் வேதனைப்பட்டேன்; அதற்காக நான் வருந்துகிறேன்.

திரு. முனுசாமி தமது செய்கைக்காக வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

உடனே திரு. ஆர். ஆர். முனுசாமி எழுந்து வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

முதலமைச்சரின் பெருந்தன்மையையும், அவையின் கண்ணியத்தையும்--பெருமையையும் காப்பதில் அவர் கொண்டுள்ள அக்கறையையும் பாராட்டுவதாகப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

சிண்டிகேட் உறுப்பினர் எழுப்பிய சாதிப் பிரச்னை

★

சட்டப் பேரவையில் வாக்குவாதம்

சென்னை, ஆக. 11—

தி.மு.க. ஆட்சியின்மீது சாதித் துவேஷக் குற்றச்சாட்டைச் சுமத்தும் உள்நோக்கத்துடன், சிண்டிகேட் உறுப்பினர் கே. எம். சுப்பிரமணியம் என்பவர் கிளப்பிய புகார் சட்டப் பேரவையில் சாதிப் பிரச்சினை எழ வழி வகுத்தது; இத்தொடர்பில் ஏற்பட்ட வாக்கு வாதம் வருமாறு:

கே. எம். சுப்பிரமணியம்:—"1971-ம் ஆண்டுத் தேர்தலின்போது சாதித் துவேஷம் கிளப்பப்பட்டதன் விளைவாக, பிராமணர்களும்--நாடார்களும் நடமாட முடியவில்லை."

டி. என். அனந்தநாயகி:—"இதுபற்றி முதலமைச்சரின் கவனத்திற்கே நான் கொண்டு வந்திருக்கிறேன்."

முதலமைச்சர் கலைஞர்:—"அம்மையார் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்ததெல்லாம், 'நாடார்கள் என் வீட்டுக்கு முன்பு வந்து கலாட்டா செய்கிறார்கள்--பாதுகாப்புத்தர வேண்டும்' என்பதுதான்."

அனந்தநாயகி:—"நாடார்கள் என்று சொல்லவில்லை."

முதல்வர்:—"'மைலாப்பூர் தொகுதியிலுள்ள மக்கள் என்னை எதிர்க்கவில்லை; விறகுத் தொட்டிக்காரர்களான நாடார்கள் எதிர்க்கிறார்கள்' என்றுதான் சொன்னார்."

அனந்தநாயகி:—"நடத்துகின்றவர்கள் யார் என்றுதான் சொன்னேன்; 'மார்த்தாண்டம் என்பவர் தலைமையில் நடைபெறுகிறது; 'சிவாஜி ரசிகர்கள்' என்ற பெயரில் நடக்கிறது' என்று குறிப்பிட்டேன்; இதற்கு முதலமைச்சர், 'கம்யூனல் கலர்' தர வேண்டாம்."

முதல்வர்:—"'சிவாஜி ரசிகர்கள்' என்ற பெயரில் நடத்தப்படுகிறது; அந்தப் போர்வையில் நாடார்கள்தான் நடத்துகிறார்கள்' என்று கூறினார்."

அனந்தநாயகி:—"முதலமைச்சர் இதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும்."

வி. கிருஷ்ணமூர்த்தி:—"இந்திரா காந்தி சென்னை வந்தபோது கூட என்னிடம் இதைச் சொன்ன அம்மையார், ஏன் இப்படிப் பின்வாங்குகிறார்கள்?"

அனந்தநாயகி:—"மயிலாப்பூர் தொகுதியிலுள்ள நாடார்கள்தான் இந்தப் பிரச்சினையில் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள்--என்றுதான் கூறினேன்; இதை ஒப்புக்கொள்ள நான் பயப்படவில்லை."

கே. டி. கே. தங்கமணி:—"ஒவ்வொரு சாதியும் என்ன செய்கிறது என்று சொல்வதற்கு அவைத் தலைவர் அனுமதிக்கப் போகிறாரா?"

முதல்வர்:—"சாதிப் பிரச்சினை அளவுக்கு இந்தப் பிரச்சினையைத் தொடங்கியிருக்க வேண்டியதில்லை; கே. எம். சுப்பிரமணியம் அவர்கள், 'பிராமணர்களும்--நாடார்களும் நடமாட முடியவில்லை' என்றார்கள்; நான் தெரிவித்துக் கொள்கிறேன்--இந்த அரசு இருக்கும் வரையில், நாடார்களானாலும்--பிராமணர்களானாலும்--வேறு எந்த வகுப்பு மக்களுக்கும் பாதுகாப்புத் தரப்படும்; தொடர்ந்து பாதுகாப்பு அளித்துக்கொண்டே இருக்கும்."

சி. பா. ஆதித்தனார்:—"நாடார் சமூகத்தைச் சேர்ந்த 14 உறுப்பினர்கள் இந்தப் பேரவையில் இருக்கிறார்கள்; 'அவர்களெல்லாம் நடமாட முடியவில்லை' என்று சொல்வது, அந்தச் சமூகத்தை இழிவுபடுத்துவதாக இருக்கும்."

பேரவைத் தலைவர்:—"கே. எம். சுப்பிரமணியம் அவர்கள், ஆரம்பத்திலேயே இந்தப் பேச்சைத் தவிர்த்திருக்கலாம்; ஒரு சமூகத்தைத் தூண்டுவதாகப் பேச்சு அமையக்கூடாது."

—சட்டப் பேரவையில்

போர் நினைவு மண்டபத்தில் ஒளி அலங்காரம்

சென்னையிலுள்ள போர் வீரர் நினைவு மண்டபத்தில் அமைக்கப்படும் மின் விளக்கு அலங்காரத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆகஸ்டு 14 ம் நாள் இரவு 9-45 மணிக்கு துவக்கி வைப்பார்.

ஏற்கனவே இரவு 11-மணிக்குத் துவக்கிவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நேரம், இப்போது மாற்றப்பட்டிருக்கிறது.

பத்து ரூபாய் நாணயம்

ஆகஸ்டு 16-ம் நாள் வெளியிடப்படும்

பம்பாய், ஆக. 12—

சுதந்தர நாள் வெள்ளி விழாவையொட்டி, பத்து ரூபாய் நாணயம் வெளியிட மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்தப் புதிய நாணயம் ஆக. 16-ந் தேதி வெளியிடப்படும்; இந்தியாவின் முக்கிய நகரங்களிலுள்ள ரிசர்வ் பாங்கிகளில் அன்றையத் தினம் இந்த நாணயத்தைப் பெற்றுக் கொள்ளலாம்; மற்ற ஊர்களிலுள்ள பாங்கிகளுக்கும் விரைவில் இந்த நாணயம் வழங்கப்படும்.

இந்தப் பத்து ரூபாய் நாணயத்தின் ஒரு புறத்தில்--சிங்கத் தலையுடன்கூடிய அசோகச் சக்கரச் சின்னம் இருக்கும்; மறுபுறத்தில், ஓர் இளைஞனும்--பெண்ணும் கையில் தேசியக் கொடி பிடித்து நிற்பதுபோன்று பொறிக்கப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

‘நாடாளுமன்றத்தில் இடம் குறையக்கூடாது’

‘குடும்பநலத் திட்டத்தால் தமிழகத்துக்கு இழப்புஏற்படாதிருக்க முயலுவோம்’

சட்டப் பேரவையில் அமைச்சர் அன்பழகன் விளக்கம்

சென்னை, ஆக. 12—

"குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை உண்மையாகச் செயல்படுத்துவதன் காரணமாக நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை குறையாமல் — தமிழகம் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்; இதைத் தொடர்ந்து அவர்களிடம் வற்புறுத்துவோம்"

என்று சட்டப் பேரவையில் கேள்விநேரத்தின்போது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

கோவைச் செழியன் (தி. மு. க.):—"குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நமது மாநிலத்தில் தீவிரமாகக் கடைப்பிடித்தால் மக்கள் தொகை எண்ணிக்கை குறைந்து -- நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டுக்கு இருந்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 2 குறைந்து விட்டதே; ஆகவே, குடும்பக் கட்டுப்பாடுதிட்டத்தைக்கைவிட்டு 'உற்பத்தி'யைப் பெருக்க இவ்வரசு நடவடிக்கை எடுக்குமா?"

அமைச்சர்:—"நாடாளுமன்றத்தில் இடம் அதிகமாக வாங்க வேண்டும் என்பதற்காக மக்கள் தொகையைப் பெருக்குவ முறையல்ல; மக்கள் தொகை நெருக்கத்தினால் சனநாயகச் சீர்குலைவும்-- அராஜகமும் ஒரு மாநிலத்தில் ஏற்படும் நிலை இருப்பதை அறிகிறோம்; அந்த மாநிலத்தின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை; மக்கள் தொகைப் பெருக்கத்தினால் வரும் அராஜகத்தை நாம் அனுமதிக்கக் கூடாது; குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் சிறப்பான முறையில் செயல்படுத்திக் காட்டுகின்ற மாநிலத்தின் உரிமை எந்த முறையிலும் குறைவுபடாமல் பார்த்துக் கொள்ளும்படி மத்திய அரசிடம் கேட்டுக்கொள்கிறேன்; மத்திய அரசு இந்தப் பிரச்சினைகளில் தீவிரமாக இல்லை, ஆனாலும் நான் வலியுறுத்த முயற்சிப்பேன்."

கோல் எப்ப நாகார்:—"குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தியதால், தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் குறைந்துள்ளதா?"

அமைச்சர்:—"7, 8 ஆண்டுகளுக்கு முன்னால், 1,000 பேர்களுக்கு 47 அல்லது 48 பேர் பிறப்பு விகிதமாக இருந்தது; ஆனால் இப்போது 32 அல்லது 33 ஆக, குறைந்து இருக்கிறது; ஆகவே, அந்த வகையில், 'அகில இந்தியாவிலும் முற்போக்கான மாநிலங்களில் ஒன்று' என்ற நிலைமைக்கு தமிழ்நாடு வந்திருக்கிறது"

ஏ. எம். இராசா (தி. மு. க):—நாடு முழுவதற்குமே நன்மைக்கான காரியமாக இருப்பதால், இதற்காக, ஆசிரியர்களைக் கட்டாயமாகப்பணியாற்றும்படி செய்படுமா"

அமைச்சர்:—"அப்படிக் கட்டாயமாக்கும் ஒன்று வருமானால், முதலில் அதில் சேவை செய்வதற்காகச் சட்டமன்ற உறுப்பினர்களைக் கட்டாயம் ஆக்கிவிட்டு -- பிறகு ஆசிரியர்களிடம் சொல்லலாம்."

கேள்வி:—"குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சைக்கு இந்துக்களை மட்டுமே ஈடுபடுத்துகிறார்கள்; கிறிஸ்தவர்களும்-- முஸ்லீம்களும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதில்லை என்று சொல்லப்படுகிறதே -- அப்படியானால், ஒவ்வொரு மதத்திலும் எத்தனை பேர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள்?"

அமைச்சர்:—"முஸ்லீம்கள் பலரும் -- பல காய்மார்களும் கருத்தடை செய்து கொண்டிருக்கிறார்கள்; கிறித்துவர்களும் அவ்வாறு செய்து கொண்டிருக்கிறார்கள்; அந்த மதங்களிலுள்ள வைதீகர்கள் தான் கருத்தடைத் திட்டத்தை எதிர்க்கிறார்கள், வைதீக இந்துக்களும் இதை எதிர்க்கிறார்கள்; வைதீக ஆதி திராவிடர்களும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை எதிர்த்திருர்கள்; ஆக, எங்கும் வைதீக'தான் எதிர்க்கிறது; மனித பிமான நோக்கம் வளர வளர இத்திட்டம் வெற்றியடையும்."

துரை முருகன் (தி.மு.க.):—"திருமணமாகி 2 ஆண்டு வரை குழந்தை பெருமல் இருக்கும் தம்பதிகளுக்கு அரசாங்கம் பரிசாகப் பணம் எதுவும் தருமா?"

அமைச்சர்:—"அப்படிப்பட்டவர்களுக்குத்தான் இயற்கையே பெரும் வளத்தை அள்ளிக் கொடுக்கிறது; குடும்பச் செலவில் 25 சதவீதம் அவர்களுக்கு மிச்சமாகிறது; பெரும் செலவு செய்யக்கூடிய உறுப்பினர் போன்றவர்களுக்கு அதெல்லாம் மிச்சம்தான; 2 ஆண்டுக்காலம் 'தேன்நிலவு' அவர்களுக்குக் கிடைக்கிறது என்றால், அந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை."

தூத்துக்குடியில் எண்ணெய்த் தொழிற்சாலை

உரிமம் கோரி விண்ணப்பம்

சென்னை, ஆக. 12—

"சதர்ன் பெட்ரோ -- கெமிக்கல் தொழில் நிறுவனம், தூத்துக்குடியில் எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கான அறிக்கை ஒன்றை அனுப்பியது; இந்தத் தொழிற்சாலைக்காக உரிமை வேண்டித் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் விண்ணப்பித்துள்ளது"

என்று தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்கள், சட்டப் பேரவையில், என். கிட்டப்பாவின் கேள்வி ஒன்றுக்கும் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

தியாகிகள் குழந்தைகட்குக் கல்விச் சலுகை

சென்னை, ஆக. 12—

"தற்போது அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை எந்த வகையில் அரசு வழங்குகிறது? மத்திய அரசு ஏதும் உதவி செய்கிறதா?"

என்று சட்டப் பேரவையில், என். கிட்டப்பா கேட்டார்.

"புத்தகம், விடுதிச் செலவு போன்றவைகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது; இதற்கு ஆகும் செலவில் ஐம்பது சதவிகிதத்தை மத்திய அரசு வழங்குகிறது"

என்று கல்வியமைச்சர் நாவலர் பதிலளித்தார்.

என். கிட்டப்பா:—"இதைப் போல் மொழிப் போராட்டத்தில் இறந்தவர்களின் குழந்தைகளுக்குச் சலுகைகள் வழங்கப்படுமா?"

அமைச்சர்:—"மொழிப் போராட்டத்தில் இறந்தவர்களின் குடும்பத்துக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது; குழந்தைகளுக்குச் சலுகை வழங்குவது பற்றிப் பரிசீலனை இல்லை."

அரிசனங்கட்கு இழைக்கப்படும் கொடுமை

பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறது டில்லி?

புதுடில்லி, ஆக. 11—

"தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுமை இழைக்கும் சம்பவங்கள் குறித்துத் தனிக் கவனம் செலுத்தி -- குற்றவாளிகளைத் தண்டிக்குமாறு மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது; இப்பிரச்சினையில், மத்திய அரசு ஒருபோதும் மெத்தனமாக இல்லை"

என்று உள்துறை துணையமைச்சர் ஆர். என். மிர்தா தெரிவித்தார்.

அரிசனங்களுக்குக் கொடுமை இழைப்பது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், இது அன்றாடச் செய்தியாகி விட்டது என்றும் உறுப்பினர்கள் பலர் கவலை தெரிவித்ததைத் தொடர்ந்து துணையமைச்சர் மேற்கண்டவாறு உறுதி கூறினார்.

மின்சாரம் வழங்கும் நிறுவனங்கள்

கட்டணத்தை அதிகரிக்க அரசு முடிவு

சென்னை, ஆக. 12—

மின்சாரம் வழங்கும் லைசென்சுதாரர்களுக்கு அளிக்கப்படும் மின்விசைக்குக் கட்டண விகிதத்தில் நவம்பர் 5-ந்தேதியிலிருந்து தமிழ்நாடு அரசு 50 சதவிகிதம் உயர்த்தியுள்ளது.

புதிய கட்டண விகிதம் வருமாறு:—

முதல் இலட்சம் யூனிட்டுகளுக்கு ஒரு யூனிட்டுக்கு 10 காசுவீதம் -- அடுத்த இரண்டு இலட்சம் யூனிட்டுகளுக்கு 9.25 காசுவீதம் -- இதற்கும் மேற்பட்டதற்கு 8 காசு வீதம்.

இதைத் தவிர, முதல் 500 கே.வி.ஏ.-வரை ஒரு கே.வி.ஏ.வுக்கு ரூ. 15; இதற்கு மேற்பட்டதற்கு ஒரு கே.வி.ஏ.-வுக்கு ரூ. 14 வீதம்.

தற்போது நடைமுறையில் உள்ள கட்டண விகிதங்கள் வருமாறு:—

முதல் ஓர் இலட்சம் யூனிட்டுக்கு -- ஒரு யூனிட்டுக்கு ரூ. 6.50 வீதம்; அடுத்த இரண்டு இலட்சம் யூனிட்டுகளுக்கு -- ஒரு யூனிட்டுக்கு 6 காசுவீதம்; அதற்கு மேற்பட்டதற்கு ஒரு யூனிட்டுக்கு 5.25 காசு வீதம்.

இதைத் தவிர, முதல் 500 கே.வி.ஏ. வரை -- ஒரு கே.வி.ஏ.வுக்கு ரூ. 10 வீதம்; அதற்கு மேற்பட்டதற்கு ஒரு கே.வி.ஏ.-வுக்கு ரூ. 9 வீதம்.

தற்போது தமிழ்நாட்டில் 12 மின்சாரம் வழங்கும் நிறுவனங்கள் உள்ளன; இவற்றில் 7 தனிப்பட்டவர்களுக்கும், 5 நகராட்சிகளுக்கும் சொந்தமானவை.

தற்போது இந்த 12 லைசென்சுதாரர்களிடமிருந்து மின்சார வாரியத்துக்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூ 4-கோடி.

‘டிடேனியம்’ தொழிற்சாலை

தமிழக அரசு யோசனை

சென்னை, ஆக. 12—

"கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை மணல் பகுதியில் கிடைக்கும் 'இல்மனைட்' என்ற ஒருவகைக் கனிப் பொருள் சுகளைக் கொண்டு 'டிடேனியம்' என்ற உலோகம் தயாரிக்கும் தொழிற்கூடத்தைத் தமிழகத்தில் துவங்கும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயும்படி தமிழக அரசு யோசனை கூறியிருக்கிறது; தமிழகத்தில் இத்தொழிற்சாலை தொடங்கப்பட்டால் அதற்குத் தேவையான மின்சார விசையை சலுகைக் கட்டணத்தில் வழங்க அரசு தயாராக இருக்கிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது"

என்று சட்டப் பேரவையில், தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

‘இல்மனைட்’ ஏற்றுமதி

மற்றொரு கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"கடந்த இரு ஆண்டுகளில் ஆண்டுதோறும் தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து ரூ. 1,350 மதிப்புள்ள 'இல்மனைட்' கனிப் பொருள் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது."

கிராமப் பகுதிகளில் மருத்துவமனை

தனிப்பட்ட மருத்துவர்களுக்குக் கடன் உதவி

சென்னை, ஆக. 12—

"தமிழ்நாட்டில் நர்சிங் ஹோம் -- சோதனைச் சாலை -- மருத்துவமனை போன்றவற்றைக் கட்டுவதற்குக் கடன் தரும்படித் தமிழ்நாடு முதலீட்டுக் கார்ப்பரேஷனை அரசு கேட்டுள்ளதா?"

என்று சட்டப் பேரவையில், என். கிட்டப்பா கேட்ட கேள்விக்குத் தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்:—

"கால்நடை மருத்துவர்கள் உட்பட மருத்துவர்கள் கிராமப் பகுதிகளில் மருத்துவத் தொழில் நடத்தவும், வேலை இல்லாத மருத்துவர்கள் கிராமப் பகுதிகளில் ஆதாயம் தரத்தக்க வேலையைத் தாமே மேற்கொள்ள அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கும், கிராம மருத்துவர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அண்மையில் கொண்டுவந்துள்ளது.

"தனி மருந்தகங்கள், தனி மருந்தக ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றை அமைக்கவும் -- சாதனங்கள் வாங்கவும் -- தனி மருத்துவமனைக்கான கட்டடங்கள் கட்டுதல் முதலியவற்றிற்கும் மருத்துவர்களுக்குத் தமிழ்நாடு தொழில்முதலீட்டுக் கழகம் நிதியுதவி அளிக்கும்."

பஸ் கட்டணம்: இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் குறைவு

எல்லா மாநிலங்களிலும் ஒரே சீரான கட்டணம் விதிக்கப் பேச்சுவார்த்தை

தமிழகப் போக்குவரத்து அமைச்சர் இராமச்சந்திரன் அறிவிப்பு

சென்னை, ஆக. 12—

"தென் மாநிலங்கள் முழுமையிலும் ஒரே சீரான பஸ் கட்டணம் வசூலிப்பது குறித்து ஆராய்ந்து முடிவு செய்வதற்காக மாநில பஸ் போக்குவரத்து அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்"

என்று, சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அறிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"பஸ் கட்டண விகிதம் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு விகிதமாக வசூலிக்கப்படுகிறது; உதாரணமாக, தமிழகத்தில் எக்ஸ்பிரஸ் கட்டணம் கிலோ மீட்டருக்கு 4 காசு என்று உள்ளது; ஆனால் ஆந்திர மாநிலத்தில் சாதாரணப் பஸ்களுக்குக் கட்டணம் 4 காசு என்று வசூலிக்கப்படுகிறது; இம்மாதிரி மாறுபாடின்றிச் சீரான கட்டண விகிதம் கொண்டுவரத் தென் மாநிலங்களைப் பொறுத்தவரை போக்குவரத்து அமைச்சர்கள் மட்டத்தில் யோசிக்கிறோம்."

"எக்ஸ்பிரஸ் பஸ் கட்டண விகிதங்களைப் பொறுத்தவரையில், தனியார் பஸ்களில் வசூலிக்கப்படும் கட்டணம் அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ் கட்டணத்தை விடக் குறைவாக உள்ளது; தேவையில்லாத போட்டியை இது உருவாக்கி -- அரசாங்க பஸ் துறையில் வசூலைக் குறைக்குமாதலால், எக்ஸ்பிரஸ் பஸ் கட்டண விகிதங்களையும் ஒரே சீராகக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படும்."

"அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ்கள் தொட்டுச் செல்லும் முக்கிய நகரங்களில் எல்லாம் பயணிகள் தங்கும் வசதி உள்ளிட்ட எல்லா வசதிகளும் செய்து கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது."

நகர பஸ் கட்டணம்

கே. எம். சுப்பிரமணியம்:—"சென்னை நகரில் பஸ் கட்டண விகிதம் குறைக்கப்படுமா?"

அமைச்சர்:—"நகர பஸ் போக்குவரத்தை நடத்தும் பல்லவா போக்குவரத்துக் கழகம், இன்னும் இலாபம் சம்பாதிக்கத் துவங்கவில்லை; சேரன் -- சோழன் -- பாண்டியன் ஆகிய மூன்று நிறுவனங்களும் இலாபத்தில் நடைபெறுகின்றன."

திரு. வீராசாமி கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில், 'இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் பஸ் கட்டணம் குறைவு' என்றார்.

ஏ. எம். இராசா கேள்விக்குப் பதிலளிக்கையில், 'குளிர் சாதன இயந்திரங்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால், 'ஏர்கண்டிஷன் சொகுசு பஸ்' விடுவது இயலாது' என்று தெரிவித்தார்.

வகாப்:—"நெடுந்தூர வண்டிகளில் புதிய வண்டிகள் விடப்படுவதுபோலக் குறைந்த தூர வண்டிகளில் புதிய வண்டிகள் விட அரசு முன்வருமா?"

அமைச்சர்:—"இந்த யோசனை கருத்தில் கொள்ளப்படும்."

‘ஆம்னி பஸ்’

கே. டி. கே. தங்கமணி:—"'ஆம்னி' பஸ்கள், முன்பு நின்று போயிருந்தன; இப்போது உயர் நீதிமன்ற அனுமதியுடன மீண்டும் ஓட்டுகிறார்கள்; இந்த மாதிரி பஸ்களைத் தடுத்து நிறுத்த அரசு என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறது?"

அமைச்சர்:—"'ஆம்னி' பஸ்களைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கைகளை உறுப்பினர் அறிவார்; இப்போது நீதிமன்ற உத்தரவுப்படி அவை ஓடுகின்றன; வழக்கு முடிந்ததும் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்தும், இந்தப் பஸ்களால் அரசுத் துறைக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது."

அனந்தநாயகி:—"'ஆம்னி' பஸ்கள் மிக வசதியாகவும் -- மிகவும் கவர்ச்சியாகவும் இருப்பதால் தான் மக்கள் விரும்பிப் போகிறார்கள்; அதைப்போல், அரசாங்கப் பஸ்களிலும் வசதிப்படுத்தலாமே -- கவர்ச்சிகரமானதாக ஆக்கலாமே? அதை விட்டுவிட்டு, 'நான் எப்படி வேண்டுமானாலும் ஓட்டுவேன்; பஸ்களே இருக்கக்கூடாது' என்று கூறுவது போலச் செய்வது வரவேற்கத்தக்கதா?"

அமைச்சர்:—"அரசாங்கப் பஸ்களில் வசதிகளை அதிகப்படுத்தி வருகிறோம்; கவர்ச்சி பற்றி உறுப்பினர் சொன்னார்; அது, அவரவர் மன நிலையைப் பொறுத்தது."

ஆர். ஆர். முனுசாமி:—"மதுரைக்கு அண்மையில் நான் சென்றிருந்தபோது, அங்கே அரசாங்கப் பஸ் நிலையத்திலேயே, இதுபோன்ற பஸ்களுக்கு டிக்கெட்டுகளுக்கு ஆட்கள் சேகரிப்பதை நான் பார்த்தேன்; இப்படி இருப்பதால், அரசாங்கப் பஸ்களுக்கு டிக்கெட் சேகரிக்க ஆட்களை அரசு நியமிக்குமா?"

அமைச்சர்:—"தனியார் பஸ்களை விட்டுவைத்தால் எதுவும் செய்வார்கள் என்பதற்கு இது ஒரு அடையாளம்"

தொழில் லைசென்சு வழங்குவதில் டில்லியின் காலதாமதம்

1971ல் 165 விண்ணப்பங்கள் முடக்கம்

சென்னை, ஆக. 10—

"புதிதாகத் தொழில் துவங்க அனுமதி கோரி வந்த விண்ணப்பங்களில், அனுமதி கொடுக்கப்படாமல் மத்திய அரசால் காலதாமதம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 1971 வரை 165 ஆகும்"

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், சட்டப் பேரவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அவற்றில் இதுவரை 53 லைசென்சுகளும், 71 ஒப்புளிப்புகளும் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினர்.

ஓமியோபதி கல்லூரி ஏற்படுமா?

சட்டப் பேரவையில் பேராசிரியர் பதில்

சென்னை, ஆக. 10—

"தமிழ்நாட்டில் ஓமியோபதி கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை"

என்று, சட்டப் பேரவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்த தகவல்கள் வருமாறு:—

"தமிழ்நாட்டில் ஓமியோபதி மருத்துவத் துறையை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் இயற்றப்பட்ட சட்டம், குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று -- அதன்படி சென்ற திங்களில்தான், 'ஓமியோபதி சழகம்' என்ற ஓர் அமைப்பை நமது முதலமைச்சர் துவக்கிவைத்தார்; அந்தக் கழகம்தான், கல்லூரி துவக்குவது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிதி நிலைமை -- வாய்ப்பு வசதிகளைப் பொறுத்து அந்தக் கழகம், கல்லூரி துவக்கவும் -- தனியார் துறையில அமைக்கப்படும் கல்லூரிகட்கு அனுமதி அளிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளும்.

புதிய ஓமியோபதி சட்டப்படி, பத்தாண்டு அனுபவம் பெற்றுள்ளவர்கள் ஓமியோபதி மருத்துவர்களாகப் பதிவு செய்யப்படுவார்கள்; மூன்றாண்டு -- நான்காண்டு அனுபவம் உள்ளவர்களுக்குத் தனியே ஒரு தேர்வு நடத்தப்பட்டு -- அதில் தேறுபவர்கள் பதிவு செய்துகொள்ளப்படுவார்கள்.

ஓமியோபதி முறையை இன்னும் அலோபதி மருத்துவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை; எனவே, அலோபதி மருத்துவக் கல்லூரிப் படிப்புடன் ஓமியோபதி முறையையும் இணைத்துக் கற்பிக்க வாய்ப்பு இல்லை.

தற்போது தமிழ் நாட்டில் 12,530 ஓமியோபதி மருத்துவர்கள் உள்ளதாக ஒரு கணக்கு கூறுகிறது; ஆனால், முழுமையான மதிப்பீடு அல்ல; தற்போது உள்ள ஓமியோபதி கல்லூரிகள், 'கல்லூரி' என்னும் இலக்கணத்துக்கு உரியவையா என்பதை ஓமியோபதி கழகம் தான் முடிவு செய்யவேண்டும்."

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக் பாட்சா நிகழ்ச்சிகள்

ஆக. 13: காலை 11 மணி: திருத்தணி—அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 11-30 மணி: திருத்தணி—அரசினர் உயர்நிலைப் பள்ளி இலக்கிய மன்றத் துவக்க விழா; மாலை 4 மணி: ஆர். கே. பேட்டை ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 5 மணி: பாலபுரம்—புதிய பள்ளிக் கட்டடத் திறப்பு; 5-30 மணி: மாகாளிபுரம்—அறிஞர் அண்ணா நினைவுக் கட்டடத் திறப்பு; 6 மணி: வீரமங்கலம்—அண்ணா மன்றத் திறப்பு; இரவு 7 மணி: எரும்பி—பொதுமக்கள் வரவேற்பு; 7-30 மணி: வங்கனூர்—தாய் - சேய் நல விடுதிக் கட்டடத் திறப்பு -- பொதுமக்கள் வரவேற்பு.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

பிள்ளைகளுக்குப் பிறந்த நாள் பரிசு

ரூ. ஒரு லட்சம் பரிசு பெறலாம்

மொத்தப் பரிசுத் தொகை

ரூ. 7,00,000*

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய் (ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்: 31-8-1972

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

செலவு ஒரு ரூபாய்

வரவோ லட்சம் ரூபாய்

இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், ... இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை.

விளம்பர வெளியீடு

தமிழ்நாடு அரசு, சென்னை-9

*2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

டாக்சி டிரைவர்கள் செய்யும் குற்றங்கள்

குறைந்து வருவதாகத் தகவல்

சென்னை, ஆக. 11—

"சென்னையில் டாக்சி டிரைவர்கள் பொதுமக்களிடம் சரியாக நடந்துகொள்ளவில்லை என்ற காரணத்துக்காக 1970-ல் 429 வழக்குகளும், 1971-ல் 382 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன; 1970-ல் ரூ 411-ம், 1971-ல் ரூ. 872-ம் அபராதமாக வசூலிக்கப்பட்டது; வழக்குகள் இப்போது குறைந்து வருகின்றன; டாக்சி டிரைவர்களும் கூடிய வரையில் ஒத்துழைப்புக் கொடுத்து வருகிறார்கள்"

என்று, போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், சட்டப் பேரவையின் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

தனியார் பள்ளிகள் நிர்வாகம்-- ஒழுங்குபடுத்த மசோதா

சட்டப்பேரவையில் நாவலர் தாக்கல்

சென்னை, ஆக. 11—

தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளி நிர்வாகக் கட்டுப்பாடு மசோதாவை சட்டப் பேரவையில், கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தாக்கல் செய்தார்.

தனியார் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவும் -- நிர்வாகம்--ஆதிக்கம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தவும், தனியார் பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் வேலை நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும் மசோதா வகை செய்கிறது.

மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது உள்ளாட்சித் துறைகள் நடத்தும் பள்ளிக்கூடங்கள் -- எந்தப் பல்கலைக் கழகத்துடனும் தொடர்புள்ள அல்லது அதனால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள் -- மத போதனை அளிக்கும் பள்ளிக்கூடங்கள் ஆகியவைகளுக்கு மசோதாவிலிருந்து விலக்கு தரப்பட்டுள்ளது.

தகுதியுள்ள அதிகாரியின் அனுமதியின்மீது, இத்தகைய அனுமதிக்கான நிபந்தனைக்கு ஏற்ப பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தவும்-- நிர்வகிக்கவும் மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த விண்ணப்பிப்பதற்கு பணம்செலுத்தவும், அனுமதி மறுக்கப்பட்டால் இந்தப் பணத்தில் ஒரு பகுதியை திருப்பிக் கொடுக்கவும் மசோதா வழி செய்கிறது.

தனியார் பள்ளிக்கூடங்களின் சொத்துக்களை மாற்றவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஒரு தனியார் பள்ளிக்கூடம் மோசமாக நிர்வகிக்கப்பட்டால் அதை தக்க அதிகாரி எடுத்துக் கொள்ள மசோதா வழி செய்கிறது; இவ்வாறு பள்ளிக்கூடம் நிர்வாகம் மேற்கொள்ளப்படுவதற்கான காலம் 5 ஆண்டுக்கு மேல் இருக்காது.

பள்ளிக்கூடக் கணக்குகளைத் தணிக்கை செய்யவும் - பள்ளிக்கூடங்களை மேற்பார்வையிடவும் -- இத்தகைய மேற்பார்வையினால் செய்யப்படும் முடிவுகளைச் செயல்படுத்தும்படி தனியார் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்குக் கட்டளையிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏழை மாணவர்கட்கு மதிய உணவு

18 இலட்சம் மாணவர்கள் பயன் பெறுகின்றனர்

சட்டமன்ற மேலவையில் நாவலர் விளக்கம்

சென்னை, ஆக. 8—

"'கேர்' நிறுவன உதவியுடன் தற்போது 96 பிளாக்குகளில் 18 இலட்சம் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது; மெல்ல மெல்ல இது விரிவாக்கப்படும்"

என்று கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், சட்டமன்ற மேலவையில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"தற்போது இத்திட்டம் செங்கற்பட்டு -- வட ஆற்காடு -- தென் ஆற்காடு மாவட்டங்களில் முழு அளவில் செயல்பட்டு வருகிறது; இதற்கென்று மத்திய சமையற்கூடம் அமைக்கப்பட்டு -- அங்கிருந்து தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது; இதற்கு அரசு 6 காசும் -- ஊராட்சி ஒன்றியங்கள் 2 காசும் -- தனிப்பட்டவர்கள் 2 காசும் -- ஆக 10 காசுகள் செலவிடப்படுகின்றன.

உணவுப் பொருட்களை, 'கேர்' நிறுவனம் வழங்கினாலும், அதைச் சமையல் செய்து வழங்கும் பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கிறது; இதில் தவறுகள் ஏற்படாதவாறு இத்திட்டத்தைச் சீரமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

வசதியற்றவர்கள் படிப்பதற்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும், வசதி பெற்றவர்கள் படிக்கும் போது -- பொருளாதார நிலை காரணமாக வசதியற்றோர் இந்த வாய்ப்பைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது."

தடை நீங்குகிறது!

லாகூர், ஆக. 12—

இதுவரை 'கம்யூனிஸ்டுக் கட்சிக்கு விதிக்கப்பட்டிருக்க தடையைப் பாகிஸ்தான் நீக்கிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மத்திய அரசு ஊழியர் கிராக்கிப் படி நிர்ணயத்துக்காக......

76 நகரங்களின் பிரிவு சீரமைப்பு

ஆண்டுக்கு ரூ. 5.25 கோடி அதிகச் செலவு

70 பேரூர்களில் மத்திய அரசு ஊழியர்கள் முதன்முதலாகக் கிராக்கிப் படி பெறுவர்

புதுடில்லி, ஆக. 12—

மத்திய அரசு ஊழியர்களின் கிராக்கிப் படி நிர்ணயத்துக்காக இந்தியாவில் 76 நகரங்களின் 'தரம்' (பிரிவு) சீரமைக்கப்பட்டிருப்பதன் பலனாக இந்திய அரசுக்கு ஆண்டொன்றுக்கு அதிகப்படியாக ரூ 5 25 கோடி செலவாகும்.

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையில் இந்நகரங்களின் தரம் மாற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து 70 நகரங்களில் உள்ள மத்திய அரசு ஊழியர்கள் முதல் தடவையாக வீட்டு வாடகைப் படி பெறுவார்கள்.

'சி' பிரிவிலிருந்து 'பி-2' பிரிவுக்கு மாறும் 5 நகரங்களில் உள்ள ஊழியர்களுக்கு அதிக வீட்டு வாடகைப் படியும் -- நகர ஈட்டுப் படியும் கிடைக்கும்.

70 பேரூர்கள் முதல் தடவையாக 'சி' பிரிவு நகர்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

1971 மக்கள் தொகை அடிப்படையில் நகரங்களையும் -- பேரூர்களையும், ஆகஸ்டு 1-முதல் திரும்பப் பிரிக்கும் அரசின் முடிவு, அறிக்கை ஒன்றின்மூலம் மக்களவையில் அளிக்கப்பட்டது

நகர ஈட்டுப் படி -- வீட்டு வாடகை அலவன்சு ஆகியவற்றை மத்திய அரசு தனது ஊழியர்களுக்குத் தர இம்முடிவு அவசியமானதாகும்.

தமிழ்நாட்டில் 9 பேரூர்கள்

முதல் தடவையாக 'சி' பிரிவு நகரங்களாகப் பிரிக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த பேரூர்கள் வருமாறு:—

பாளையங்கோட்டை விழுப்புரம், காரைக்குடி, போடிநாயக்கனூர், தாம்பரம், ஆம்பூர், வாணியம்பாடி, கடையநல்லூர் திருவரங்கம்.

ஆந்திரத்தில், திருப்பதி 'சி' பிரிவு நகராகிறது.

சீரணி அரங்கில் பொதுக்கூட்டம்

அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பு

சென்னை, ஆக. 12

இந்தியச் சுதந்தர வெள்ளி விழாவையொட்டி ஆகஸ்டு 15 ம்நாள் இரவு 7 மணிக்கு சென்னை -- மெரினா கடற்கரையிலுள்ள சீரணி அரங்கில், அனைத்துக் கட்சிப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

கூட்டத்துக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமை தாங்குவார்.

அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுவர்; அவர்கள் விவரம் வருமாறு:—

திரு. ம. பொ. சிவஞானம் (தமிழரசுக் கழகம்)

திரு. கே. இராசாராம் நாயுடு (சிண்டிகேட்)

திரு. எஸ். செயராம ரெட்டியார் (இந்திரா காங்கிரசு)

திரு. சா. கணேசன் (சுதந்தரா)

திரு. ஏ. ஆர். பெருமாள் (பார்வர்டு பிளாக்)

திரு. கே. டி. கே. தங்கமணி (வலது கம்யூனிஸ்டு)

திரு. அப்துல் வகாப் (முஸ்லிம் லீக்)

திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சி (உழைப்பாளர் கட்சி)

திரு. ஏ. ஆர். தாமோதரன் (ஐக்கிய முன்னணி)

திரு. குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி.

மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களும் கூட்டத்தில் கலந்துகொள்வார்.

ஓட்டல்களில் விற்பனை வரி வசூல்

'சட்டபூர்வமானதே' என அமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக. 11—

"சில பெரிய ஓட்டல்களில் பரிமாறப்படும் உணவு வகைகளுக்கும் விற்பனை வரி வசூலிப்பது அரசுக்குத் தெரியும்; அப்படி வசூலிப்பது சட்டவிரோதமல்ல; இது, விற்கப்படும் பண்டங்களின் மீது வசூலிக்கும் வரியாகும்"

என்று உணவு -- வருவாய்த் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள், சட்டப் பேரவையில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சட்டமன்ற நள்ளிரவுக் கூட்டம்

சென்னை, ஆக. 11—

விடுதலை வெள்ளி விழாவை முன்னிட்டு, தமிழகச் சட்டமன்றத்தில் இரு அவைகளின் கூட்டுக் கூட்டம் 14-8-72 இரவு 10.45 மணிக்குக் கூடும்.

தமிழ்த்தாய் வணக்கத்துடன் கூட்டம் தொடங்கும்.

ஆளுநர் -- முதலமைச்சர் -- சட்டப் பேரவை -- மேலவைத் தலைவர்கள் -- அவை முன்னவர்கள் -- எதிர்க் கட்சித் தலைவர்கள் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

கூட்ட இறுதியில் 2 நிமிடம் மௌனம் அனுசரிக்கப்படும்.

நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இரவு 12 02 மணிக்கு முடிவுறும்.

இந்தக் கூட்டத்திற்குப் பார்வையாளராக அழைப்புப் பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

இத்தகவலை, இன்று சட்டப் பேரவைத் தலைவர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள் அறிவித்தார்.

வருமான வரி பாக்கி -- ரூ. 438.60 கோடியாம்

புதுடில்லி, ஆக. 12—

"கடந்த மார்ச் திங்கள் வரையில், இந்தியா முழுவதிலும் வருமான வரி பாக்கியாக இருப்பது ரூ. 438 60 கோடியாகும்"

என்று நாடாளுமன்றத்தில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

கடை -- வீடு -- அலுவலகங்கள்மீது நடைபெற்ற தாக்குதல்

வன்முறையாளர்மீது வழக்கு நடைபெறும்

சட்டப் பேரவையில் முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஆக. 11—

கே. சுப்பு:—"இராசபாளையத்தில் காங்கிரசு -- கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களின் கடைகளும், வீடுகளும் தாக்கப்பட்டிருக்கின்றன; தாக்கியவர்கள்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை"

முதலமைச்சர் கலைஞர்:—"இருதரப்பிலும் கைது செய்திருக்கிறோம்; வழக்குகளையெல்லாம் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்கப்பட்டது; இப்போது உறுப்பினர் என்ன சொல்கிறார் -- நடவடிக்கை எடுக்கவேண்டுமா வேண்டாமா?"

கே. சுப்பு:—"தாக்கியவர்களின்மீது நடவடிக்கை எடுக்கவில்லை; யாரும் கைது செய்யப்படவில்லை."

முதல்வர்:—"கைது செய்யப்பட்டவர்கள் எல்லாம் ஜாமீனில் விடப்பட்டிருக்கிறார்கள்; வழக்கு தொடர்ந்து நடத்தலாமா--நடவடிக்கை எடுக்கலாமா?"

கே. சுப்பு:—"ஒரு நபரும் கைது செய்யப்படவில்லை; அமைச்சர் மாதவன் அந்தப் பகுதிக்கு வந்தார்; குற்றம் செய்தவர்களோடு ஊர்வலமாக வந்தார்."

அமைச்சர் மாதவன்:—"தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் -- கழக ஆதரவாளர்கள் ஆகியோரின் கடைகள் நொறுக்கப்பட்டதா, இல்லையா?"

கே. டி. கே. தங்கமணி:—"தி. மு. க.-வினருடைய கடைகள் தாக்கப்படவில்லையா என்கிறார்; அப்படியானால், வேறு கட்சிக்காரர்களின் இடங்கள் தாக்கப்படவில்லையா?"

அமைச்சர் மாதவன்:—"இரு தரப்பினரும் செய்திருக்கிறார்கள்; முதலமைச்சர் கேட்பதெல்லாம், 'நடவடிக்கை எடுக்கவேண்டுமா-- வேண்டாவா' என்பதைத்தான்."

கே. டி. கே. தங்கமணி:—"இந்த அளவுக்குக் காட்டுமிராண்டித்தனமாக நடந்ததற்காக மனிதாபிமானமுள்ள யாரும் வருத்தப்படுவார்கள்."

முதல்வர்:—"இராசபாளையத்தில், கழகக் கலை நிகழ்ச்சிகள் நடத்தி வந்த மணி -- சாமி குழுவினர், கலை நிகழ்ச்சி நடத்த -வழிச் செலவு போக மீதமுள்ள பணத்தைச் சேமித்துக் கட்டியிருந்த வீட்டை நொறுக்கியிருக்கிறார்கள்; இன்று அவர்கள் ஓட்டலில் தங்கியிருக்கிறார்கள்; கம்யூனிஸ்டுகளும் -- காங்கிரசுக்காரர்களும் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்திருக்கிறார்கள்."

கே.டி.கே. தங்கமணி:—"காங்கிரசுக் கட்சியினுடைய அலுவலகங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன."

முதல்வர்:—"வழக்கைத் திரும்பப் பெற்றதால்தான், இவ்வளவு சங்கடங்களும்; தொடர்ந்து நடத்தினால் முழு விவரமும் தெரிந்துவிடும்."

கே.டி.கே. தங்கமணி:—"புகார் கொடுக்கப்பட்ட யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தகவல் இல்லை; வீடுகள்--கடைகள் தாக்கப்பட்ட வழக்குகளை நடத்த வேண்டும்."

முதல்வர்:—"தங்கமணி சொன்ன யோசனைகளின்படி, விவசாயிகள் கிளர்ச்சியையொட்டி நடந்த துப்பாக்கிப் பிரயோகம்--மறியல் சம்பந்தப்பட்ட வழக்குகளைத் தவிர்த்து, கட்சி அலுவலகங்கள்-- கடைகள்--வீடுகள் தாக்கப்பட்ட வழக்குகள் எல்லாம் தொடர்ந்து நடக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்."

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்

அருகிலுள்ள மருத்துவ நிலையத்தில் ஆய்வுரை பெறுக

வெளியீடு: நலவழி—குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6.

சுதந்தர நாள் வெள்ளி விழா

சிறைக்கைதிகள் தண்டனை குறைப்பு

அதிகாரபூர்வமான அறிவிப்பு

புதுடில்லி, ஆக. 12—

சுதந்தர நாள் வெள்ளி விழா கொண்டாடப்படுவதையொட்டிக் கைதிகளின் தண்டனை குறைக்கப்படுகிறது; இதுபற்றிய அதிகாரபூர்வமான அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது; இந்தத் தண்டனை குறைப்பு இம்மாதம் 15ந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

ஒவ்வொரு கைதிக்கும் தண்டனையில் எவ்வளவு குறைக்கப்படுகிறது என்ற விவரம் வருமாறு:—

பத்து ஆண்டுகளுக்கு மேல் கடுங்காவல் சிறைத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனை அடைந்தவர்கள் -- தண்டனைக் காலத்தில் ஓராண்டு குறைக்கப்படும்.

ஐந்து ஆண்டுகளுக்குமேல் 10 ஆண்டுகள்வரை தண்டனை அடைந்தவர்கள் -- தண்டனைக் காலத்தில் 6 மாதங்கள் குறைக்கப்படும்.

ஓராண்டுக்குமேல் 5 ஆண்டுகள் தண்டனையடைந்தவர்கள் --- 3 மாதங்கள் குறைக்கப்படும்.

ஒருமாதத்துக்கு மேல் ஓராண்டு வரை சிறைத் தண்டனை அடைந்தவர்கள், தண்டனைக் காலத்தில் பாதியை அனுபவித்துவிட்டிருந்தால் விடுதலை செய்யப்படுவார்கள்; இல்லையேல், தண்டனைக் காலத்தில் 2 மாதங்கள் குறைக்கப்படும்.

ஒரு மாதமும் அதற்கு குறைவாகவும் தண்டிக்கப்பட்டவர்கள்; அனைவரும் 15-ந்தேதி விடுதலை செய்யப்படுவார்கள்.

தூக்குத் தண்டனைக் கைதிகள்

தூக்குத் தண்டனைக் கைதிகளுக்குத் தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டு -- அது ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படும்.

இந்த ஆண்டு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கும் கைதிகளில் எந்தவித வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு மன்னிப்பு அளிப்பது என்று மத்திய அரசு விதிமுறைகளை வகுத்து வருகிறது; இந்த விதிமுறைகள் மாநில அரசுகளுக்கு அனுப்பிவைக்கப்படும்; இதன் அடிப்படையில் உள்ள கைதிகளுக்கு மாநில அரசாங்கமே தண்டனையைக் குறைக்கலாம்.

மெரினா கடற்கரையில் அணிவகுப்பு

அலங்கார ஊர்திகள் கலந்துகொள்ளும்

6-போர் விமானங்கள் கூட்டாகப் பறக்கும்

சென்னை, ஆக. 12—

சுதந்தர வெள்ளி விழாவை முன்னிட்டு சென்னை மெரினா கடற்கரையில் வண்ண ஓவியக் கண்காட்சியும் -- மரியாதை அணிவகுப்பும் நடைபெறும்.

மரியாதை அணிவகுப்பில் என். சி. சி. -- போலீசு -- சாரணர் -- செயின்ட் ஜான் ஆம்புலன்சு -- சீரணியினர் -- மற்றும் முன்னாள் இராணுவத்தினர் பங்கேற்பர்.

கடந்த 25 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து விளக்கும் 30 அலங்கார வண்டிகள் அணிவகுப்பில் கலந்துகொள்ளுகின்றன.

மெரினா கடற்கரையில் மரியாதை அணிவகுப்பு துவங்குவதற்குமுன், விமானப் படையின் 6 போர் விமானங்களின் அணிவகுத்தும் பறந்து செல்லும்.

தமிழக ஆளுநர் கே. கே. ஷா, மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், முதலமைச்சர் கலைஞர் ஆகியோர், மெரினாவிலுள்ள காந்தி சிலைக்கு அருகிலிருந்து அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிடுவர்.

நன்றி மறக்க மாட்டாராம்!

சென்னை, ஆக. 12—

இந்த ஆட்சியில் மகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதாகச் சட்டப் பேரவையில் பேசிகொண்டிருந்த திருமதி டி. என். அனந்தநாயகி பின்வருமாறு கூறினார்:—

"முதலமைச்சர் எனக்குப் பாதுகாப்புக் கொடுத்ததைப் பற்றிச் சொன்னார்; எனக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது; அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்; நன்றி மறந்து விடமாட்டேன்!"

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கும்; பின்னணியில் நாடாளுமன்றக் கட்டடம் தெரியும்.

இந்த நாணயம், வெள்ளி -- தாமிர உலோகக் கலவையில் செய்யப்பட்டுகிறது.

புதிய 50 காசு நாணயம்

அதேபோன்று, புதிய 50 காசு நாணயமும் ஆக. 16ந் தேதி வெளியிடப்படும்; பத்து ரூபாய் நாணயத்தைப் போலவே இதிலும் படம் பொறிக்கப்பட்டிருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, முரசொலி அச்சகத்தில் (...) [illegible]